# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COUR-T OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.**

STC.No.453-2023 **L.W.1** P.W.1

| Name | தமிழ்செல்வி | Caste | |
|---|---|---|---|
| Father/Husband Name | முருகன் | Calling | |
| Village | தொளார் | Religion | |
| Taluk | திட்டக்குடி | Age | 44 |
| District | கடலூர் | Time | 3.10 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 01.10.2024 நாளாகிய இன்று திரு.அன்பு பி.எ., பி.எல்., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்

**எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜரில்லை.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

**1.** நான் தொளாரில் வசித்து விவசாய வேலைசெய்து வருகிறேன். எனக்கு பட்டியல் சாட்சி 2 விஷ்ணு, பட்டியல் சாட்சி 3 திவ்யா ஆகியோரை தெரியும் மற்ற பட்டியல் சாடசிகளை தெரியாது. ஆஜர் எதிரியை ஒரு வருடமாக பிரச்சனைக்கு பிறகுதான்தெரியும். கடந்த 20, 30 வருடங்களாக சமத்துவ புரத்தில் உள்ள நத்தம் புறம்போக்கில் நாங்கள் பயிர்வைத்துக்கொண்டிருந்தோம். நாங்கள் பயிர்செய்த நத்தம் புறம்போக்கு நிலத்தை அரசாங்கம் எடுத்துக்கொண்டது. மீதம் இருந்த சிறிய அளவிலான இடத்தை நான் மாடு வைத்து வைக்கோல் போர் போட்டு மண் அடித்து அனுபவித்து வந்தேன். அந்த இடத்தில் கட்டிடமும் கட்டினோம். ஆஜர் எதிரியின் மருமகளுக்கு மற்றும் ஆஜர் எதிரிக்கும் தென்புறத்தில் வீடு உள்ளது. நான் என்னுடைய மேற்ச்சொன்ன வீடுகட்டியிருந்த இடத்தில் வைக்கோல்போர் போட்டுக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரியின் கணவர் பாலதண்டாயுதபாணி உங்களுக்கு ஏது வீடு சம்த்துவபுறத்தில் வீடுஇல்லை என வைக்கோலை தூக்கி வெளியேபோட்டு மான நஷ்டமாக ஜாதி பெயரை எல்லாம்சொல்லி வெளியே சொல்ல முடியாத வார்த்தைகளால் திட்டினார். விஷ்ணு என்ற பையனை கையால் செவுளில் அடித்தார். அதன் பிறகு ஆவினங்குடி காவல் நிலையத்தில் நான் புகார் அளித்தேன். போலிஸார் விசாரித்தார்கள். தற்போது சமூகம் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஆவணமான புகார் மனு நான் கொடுத்ததுதான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள கையெழுத்து **அ.சா.ஆ1** ஆகும். புகாருக்கு மறுநாளும் பாலதண்டாயுதபாணி அதேபோன்று வைக்கோல் போரை தூக்கிவெளியே போட்டார். அந்தவைக்கோலை மாடு திண்பதற்காக நான் எடுத்து வைக்கும்போது

ஆஜர் எதிரி என்னை கல்லால் வலது காலில் அடித்தார். நான் கீழேவிழுந்து விட்டேன். பிறகு என்னுடைய முடியை பிடித்து இழுத்து அடித்தார். அதனால் எனது முன்தலையில் இருந்த முடிகளை பிய்த்து எடுத்துவிட்டார். சாட்சி கை வைத்து அடையாளம் காட்டுகிறார். வயிற்றில் எட்டி உதைத்தார் நான் கிழேவிழுந்து விட்டேன். வலது கால் முட்டியில் காயம் ஏற்பட்டது. தழும்பு இதுவரை உள்ளது. இதன் பிறகு மருத்துவ சிகிச்சைக்காக திட்டக்குடி அரசுமருத்துவமனைக்கு சென்றேன். அங்கு முதல் சிகிச்சை பெற்றுக்கொண்டு சிதம்பரம் மருத்துவமனைக்கு எழுதிக்கொடுத்தார்கள் என்னால்போக முடியவில்லை நான் அரியலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு நான்கு நாட்கள் புறநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். மேற்க்கொண்டு சி.டி.ஸ்கேன் எடுக்க வேண்டியிருந்ததால் என்னை உள்நோயாளியாக சேரச்சொன்னார்கள். 21 ம் தேதி உள்நோயாளியாக சேர்ந்து 25 ம் தேதி வரை சிசிச்சை எடுத்துக்கொண்டேன். இந்த இடைப்பட்ட காலத்தில் என் கணவரை போலிஸார் விசரித்தார்கள். போலிஸார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்க வில்லை. மேற்ச்சொன்ன சம்பவமானது 14 ம்தேதி 8 ம் மாதம் நடந்தது. ஆண்டு நினைவில்லை. இந்த சம்பவத்திற்குபிறகும் ஆஜர்எதிரி மற்றும் அவருடைய கணவர் அந்த இடத்தில் பயிர்செய்து கொண்டு பிரச்சனை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

**எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை இல்லை.**

**TYPED TO MYDICTATION OPENCOURT**
**INPRESENCE OF ACCUSED READOVER**
**TO THE DEPONENT AND ADMITTED BY**
**HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**

**THITTAGUDI**